**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**
**Date of Publication : 5th & 6th of Every month**

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
| --- | --- |

வேணு : 15 அக்டோபர் 2009 கானம் : 3



ஆந்திர மாநிலம் ஜங்கோவிந்தில் நடைபெற்ற ஸ்ரீ நாம வேத பாடசாலை ஆகஸ்டு 29

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**
**Email:contact@namadwaar.org**

Rs.10/-

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வெள்ளரை கிராமம் அரசு சிறுவர்
பள்ளி செப்டம்பர் 21, 2009



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 15 அக்டோபர் 2009 கானம் : 3



கோவிந்தபுரம் சைதன்ய குடீர் ஆண்டு விழா செப்டம்பர் 4, 2009

சேங்கனூர் செப்டம்பர் 11, 2009





வைப்பூர் கிராமம் செப்டம்பர் 21, 2009

கூழங்கல்சேரி கிராமம்
செப்டம்பர் 21, 2009





கலட்டுபட்டு கிராமம்
செப்டம்பர் 20,
2009



சிவன் கோவில் கும்பாபிஷேகம், தூசி மாமண்டூர், காஞ்சிபுரம் செப்டம்பர் 1, 2009

வெள்ளரை கிராமம், அரசு சிறுவர் பள்ளி (சீருடை வழங்கல்) செப்டம்பர் 21, 2009







நவராத்திரி – மதுரபுரி ஆஸ்ரமம் – செப்டம்பர் 19–27, 2009

நவராத்திரி – மதுரபுரி ஆஸ்ரமம் – உபன்யாசம்





கிருபா சேவை மையம்,
ஸ்ரீபெரும்புதூர் –
செப்டம்பர் 22, 2009

ஸ்ரீ ஹரி :


மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

**வேணு:15 அக்டோபர் 2009 கானம்:3**


- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.


உள்ளே ...


| | |
|---|---|
| கீர்த்தனம் | 02 |
| மதுரமான மஹனீயர் - 163 | 04 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதில்கள் | 09 |
| பாகவத பழம் -15 | 11 |
| பாலகர்களுக்கு ஒரு கதை | 25 |
| ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் | 29 |
| மாலே மணிவண்ணா - 77 | 32 |
| அக்ஷரமணமாலை -162 | 35 |


**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**ஆயு: க்ஷண லவ மாதரம் ந லப்யதே ஹேம கோடிபி: க்வாபி**
**தச்சேத் கச்சதி சர்வம் ம்ருஷா தத: காऽதிகா ஹாநி:**

**ஆயுளில், சென்று விட்ட ஒரு க்ஷணத்தின் மிகச்சிறியதான அளவு கூட, கோடிக்கணக்கான பொன்களால் ஒருபொழுதும் அடையப்படுவதில்லை.அப்படிப்பட்ட, மிகுந்த புண்யவசத்தால் கிடைக்கப்பெற்ற மானிடப்பிறவியின் ஆயுள் முழுவதும் வீணாகி விடுமாகில் அதை விட நஷ்டம் எது?**

(ப்ரபோத ஸுதாகரம் - ஆதிசங்கரர்)



## *ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்*

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி



பல்லவி

கைையத் தாடா கோகுல ரமணா
கைையத்தாடா
கையில் நிறைய
பால்வெண்ணை தருவேன்
கைையத்தாடா

சரணங்கள்

தேவ தேவா தேவகி மைந்தா (கையைதாடா)
வசுதேவன் மைந்தா பரவாசுதேவா (கையைதாடா)
யஶஸ்வினி யஸோதை குழந்தாய் (கையைதாடா)
நந்தன் பெற்ற நல்வரமே (கையைதாடா)
பூதனை ப்ராணனை குடித்த புண்யா (கையைதாடா)
சகடத்தைச் சாடிய ஸர்வஸ்வாமி (கையைதாடா)
காற்றரக்கனை வீழ்த்திய விமலா (கையைதாடா)
பால்வெண்ணை திருடிய பாலகனே (கையைதாடா)
மண்ணை உண்ட மண்ணளந்தவா (கையைதாடா)
உரலில் கட்டுண்ட உபநிஷத் பொருளே (கையைதாடா)
குபேரன் குழந்தைகள் குற்றம் தீர்த்தாய் (கையைதாடா)
மாடு கன்றுகள் மேய்த்திட்ட மாதவா (கையைதாடா)
ஆங்காங்கு வந்த அரக்கரை சாடியவா (கையைதாடா)
ஆயர்களுடன் உணவுண்ட உத்தமா (கையைதாடா)
பசுவும் கன்றும் பாலகனுமானாய் (கையைதாடா)
நான்முகனை நடுநடுங்கச் செய்தாய் (கையைதாடா)

காளியன் தலையில் ஆடிய குருவே (கையைதாடா)
காட்டுத்தீயை விழுங்கிய வித்தகா (கையைதாடா)
வேங்குழலூதி குளிரச் செய்தாய் (கையைதாடா)
உடைகளை மறைத்த உத்தமன் நீயே (கையைதாடா)
வேள்வி மனையாளின் உணவை உண்டாய் (கையைதாடா)
இந்திர வேள்வியை தடுத்தவனே (கையைதாடா)
கோவர்த்தன மலையை குடையாய் பிடித்தாய் (கையைதாடா)
ராஸம் ஆடிய அழகுக்கு அழகே (கையைதாடா)
அக்ரூரர் அழைக்கச் சென்றவனே (கையைதாடா)
கூனிக்கு அழகும் இளமையும் தந்தவா (கையைதாடா)
சாணூர முஷ்டிக மல்லர்களை சாடியவா (கையைதாடா)
குவலயா பீடத்தை குதறி எறிந்தாய் (கையைதாடா)
மாமன் கம்ஸனுக்கு எமனும் ஆனாய் (கையைதாடா)
தாய் தந்தையரை சிறை விடுத்தாய் (கையைதாடா)
உக்ரசேனனுக்கு அரியாஸனம் தந்தாய் (கையைதாடா)
சாந்தீபனியிடம் சீடனும் ஆனாய் (கையைதாடா)
குருமுனிக்கு குழந்தை தந்தாய் (கையைதாடா)
உத்தவன் பெற்ற பெருநிதியே (கையைதாடா)
அந்தணர் கொணர்ந்த கடிதம் கண்டாய் (கையைதாடா)
விதர்ப்ப குமாரி விவாகம் முடித்தாய் (கையைதாடா)
கையைத்தாடா கோகுல ரமணா
கையைத்தாடா
கையில் நிறைய பால்வெண்ணை தருவேன்
கையைத்தாடா



# *மதுரமான மஹனீயர் - 163*

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)



உலகத்தில் இதுவரை எவ்வளவோ மஹான்கள் அவதாரம் செய்துள்ளார்கள். அவர்கள் அனைவருமே பகவன் நாமத்தின் அவசியத்தையும், பெருமையையும், மஹிமையையும் போற்றி பாடியும், கூறியும் வந்துள்ளார்கள். இருந்த போதிலும் காஞ்சிகாமகோடி பீடத்தில் வந்த பகவன் நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்தான் முதல் முதலாக நாம சித்தாந்தம் செய்தார். இது விஷயமாக எட்டு கிரந்தங்கள் செய்தார். அதில் பகவன்நாம ரஸோதயம் என்பதே மிகவும் பெரியதும் மிகவும் முக்கியமானதும் கூட.

காஞ்சிகாமகோடி பீடத்தில் வந்த பகவன் நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்தான் முதல் முதலாக நாம சித்தாந்தம் செய்தார். இது விஷயமாக எட்டு கிரந்தங்கள் செய்தார். அதில் பகவன்நாம ரஸோதயம் என்பதே மிகவும் பெரியதும் மிகவும் முக்கியமானதும் கூட.

அத்தகைய மஹான் ஜீவ சமாதி அடைந்துள்ள கோவிந்தபுரத்தில் அவருடைய அதிஷ்டானத்தை சுற்றி, பல சம்பிரதாயத்தை சேர்ந்த பஜனை மடங்கள் அமைந்து நாமகீர்த்தனம் நடைபெற வேண்டும் என்பது ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களின் ப்ரேரணை. அதன்படி அங்கு சைதன்ய குடீர் அமைக்கப்பட்டது. அதை ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களே தனது திருக்கரங்களால் திறந்து வைத்து ஜகன்னாதருடன் சுபத்திரா,

பலராமன் ஆகியோரை பிரதிஷ்டை செய்தார்கள். மேலும் சைதன்யரையும் நித்யானந்தரையும் பிரதிஷ்டை செய்தார்கள்.

இந்தியா முழுவதிலும் மற்றும் வெளிநாடுகளிலும் சென்று நாமகீர்த்தனம் செய்து வந்தார் விஷ்ணுராத பாகவதர். அவர் சென்னை ஸமஸ்க்ருத கல்லூரியில் வேதாந்த சிரோமணியும் படித்துள்ளார். அவர் ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களின் ப்ரேரணையின்படி, சைதன்ய குடீர் துவங்கிய தினத்திலிருந்து, அங்கேயே தங்கி ஜகன்னாதரை பூஜை செய்து கொண்டும், அகண்டமாக நாமகீர்த்தனம் செய்து கொண்டும் வருகின்றார். அன்றிலிருந்து இன்று வரை அங்கு அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வருகிறது.



கோவிந்தபுரம் வரும்பொழுதெல்லாம் ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்கள் அங்கு வருவார்கள். அதோடு மட்டுமல்லாமல் பிரதி வருடமும், பிரதிஷ்டாதினத்திற்கும் வருவார்கள். அது போல், இந்த வருடம் பிரதிஷ்டா தினம் செப்டம்பர் 4ம் தேதி வந்தது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு நாமகீர்த்தனம் செய்தார்கள். மாலை ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்கள் விஜயம் செய்தார்கள். நம் ஸ்வாமிஜி ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்களை பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்றார்கள். ஸ்ரீஸ்ரீஅண்ணா அவர்கள் தன்னை மறந்து மஹாபிரபு போல் பக்தர்களுடன் கூடி லலிதமாக பாவத்துடன் கீர்த்தனம் செய்ததை பார்த்தவர்களின் கண்கள் பாக்யம் செய்தன.



## ஸ்ரீஸ்வாமிஜியின் சிந்தனையில் பூத்த மலர்கள்

* எல்லோரும் கோவிலில் தெய்வத்தை பார்க்கும்பொழுது, இந்த தெய்வம்தான், என் ஹ்ருதயத்தில் ஆத்மாவாக இருக்கின்றது என்று நினைப்பார்கள். ஆனால் ஞானியோ எது என் ஹ்ருதயத்தில் ஆத்மாவாக பிரகாசிக்கின்றதோ, அதை ஆலயத்தில் பார்க்கின்றேன் என்பான். கர்ப்பத்தில் இருந்த குழந்தைதான் வெளியில் வந்ததே தவிர, வெளியே இருந்து குழந்தை உள்ளே செல்வதில்லை அல்லவா?

* ரூபவதியான ஒரு பெண்ணை எனக்கு தெரியும். அழகு என்றால் கொள்ளை அழகாக இருப்பாள். பல மாதங்களுக்குப் பிறகு, மீண்டும் அவளை நான் பார்க்கும்பொழுது உடல் மெலிந்து, வெளிறி, கன்னங்கள் ஒட்டி, கண்கள் சொருகி காணப்பட்டாள். அவளுக்கு காச நோய் அல்லது புற்று நோய் போன்ற வியாதி வந்திருக்கும் என்று நினைத்து அவளிடம் கேட்டேன். அதற்கு அவள், தான் ஒரு புருஷனை விரும்பியதாகவும், ஆனால் அவன் அவளுக்கு கிடைக்காததாகவும், அதனால்தான் இப்படி ஆகி விட்டதாகவும் கூறினாள். உடனே எனக்கு என்னை பார்க்கவே வெட்கமாகி விட்டது. மாமிச சரீரத்தினால் ஆன ஒருவன் கிடைக்காததற்கு, இவள், இப்படி ஆகியிருக்கும்பொழுது, பகவான் கிருஷ்ணனுக்காக ஏங்கி, எனக்கு இப்படி ஆகவில்லையே? நன்றாக உண்டு உறங்கிக்கொண்டிருக்கின்றேனே என்று நினைத்தேன். அவளை மானசீகமாக நமஸ்கரித்தேன்.

* அறிவில்லாமலும், ஒழுக்கமில்லாமலும், குணம் இல்லாமலும் இருக்கும் குழந்தையை பெற்ற தகப்பன் அவமானப்படுவானல்லவா? ***ஞான தந்தையான கிருஷ்ணா! , உன் குழந்தையான நான் பக்தி, விரக்தி, ஞானம் இல்லாமல் இருப்பது உனக்கு அவமானமில்லையா? சீக்கிரம் எதாவது செய்.***

✻ உலகத்தில் யார் வேண்டுமானாலும், நம்மை வாழ்த்தத்தான் செய்யட்டும் அல்லது தூற்றத்தான் செய்யட்டும். அதனால் என்ன ஆகி விடப்போகின்றது? ஒரு கிருஷ்ண பக்தர் நம் மீது எச்சில் துப்பினால் கூட போதும். நமக்கு கிருஷ்ண பக்தி வந்து விடும்.

✻ பண்டிதன் ஹ்ருதயத்திலும் கிருஷ்ணன்; பாமரன் ஹ்ருதயத்திலும் கிருஷ்ணன்; தனிகன் ஹ்ருதயத்திலும் கிருஷ்ணன்; தரித்திரன் ஹ்ருதயத்திலும் கிருஷ்ணன்; ஆரோக்கியம் உள்ளவன், வியாதியஸ்தன், குழந்தை, வயதானவன், ஞானி, அக்ஞானி, ஆஸ்திகன், நாஸ்திகன், எறும்பு முதல் ப்ரும்மா வரை எல்லோருடைய ஹ்ருதயத்திலும் கிருஷ்ணன்.

✻ கிருஷ்ணனுடைய தலையில் உள்ள மயில் தோகையில் ஒரே ஒரு இதழை தரிசனம் செய்தாலும் கூட போதும்.

✻ சாக்லேட் கேட்கும் ஒரு குழந்தையை பார்த்து தாயார், ஒன்று, இரண்டு, பத்து வரை சொல், சாக்லேட் தருகின்றேன் என்று சொல்லுவாள். குழந்தை சொன்னவுடன் சொன்னதற்காக கொடுத்தது போல் கொடுத்து விடுகிறாள் தாய். அவ்வளவே! அதுபோல்தான் ஆன்மானுபவம் பெற வேண்டி, ஜபம் பிரணாயாமம், விரதம், உபவாசம் போன்ற சாதனைகளை செய்வது. சாதனைக்காக கொடுத்தது போல் பகவான் பலனை கொடுக்கிறான். பகவானின் கிருபைதான் ஆன்மானுபவம் தருகிறது; சாதனை அல்ல!

✻ அழகான மனைவி, அழகான மனை, அழகான குழந்தைகள், அழகான உருவம் இருந்தும் ஒருவன் பிறவியிலேயே குருடாக இருந்தால், அவனுக்கு மேற்படி அழகினால் என்ன பிரயோஜனம்? அதுபோல் வாழ்க்கையில் எல்லா வளமும் இருந்தும் க்ருஷ்ண பக்தி இல்லாவிடில் ஒரு பலனும் இல்லை.



✻ ஒரு சீடன் குருவை அணுகி தான் பூஜை செய்ய விரும்புவதாக சொன்னான். குருவும் மலர்ந்த முகத்துடன், 'செய்' என்றார். சீடன் "குருவே, என்னிடம் பூஜை செய்ய வேண்டிய பொருட்கள் இல்லை. மேலும் எப்படி பூஜை செய்ய வேண்டும் என்பதையும் சொல்லித் தர வேண்டும்' என்று கூறினான். "இருப்பதை கொண்டு பூஜை செய்வாயாக" என்றார் குரு. குரு எதையும் சரியாகத்தான் சொல்வார் என்று அறிந்திருந்த சீடன் அவரிடமே "என்னிடம் ஒன்றும் இல்லை. எதை கொண்டு செய்வது" என பணிவுடன் கேட்டான். குருவும் தயங்காமல் "இருப்பதை கொண்டு பூஜை செய்" என மறுபடியும் சொன்னார்.
ஆழ்ந்து யோசித்தவனுக்கு "ஆஹா! இருப்பதை கொண்டு பூஜை செய் என்றால் மனதை கொண்டு பூஜை செய் என்றிருக்கிறார். ஆக மானசீக பூஜை செய்ய சொல்கிறார்" என புரிந்து கொண்டான்.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

**கேள்வி:** ***பாகவத தர்மத்தை பற்றி உயர்வாக சொல்கின்றீர்களே? இந்த பாகவத தர்மத்திற்கு அப்படி என்ன பெருமை?***

பதில்: யோகதர்மம், ஸ்ம்ருதி போன்ற மற்ற தர்மங்களை அந்த, அந்த மஹரிஷிகளை கொண்டு சொல்ல வைத்து விட்டு, பாகவத தர்மத்தை பகவான், தன் முகமாகவே சொல்வதுதான் பாகவத தர்மத்திற்கு இருக்க கூடிய பெருமை.

**கேள்வி:** ***பாகவத தர்மத்தை அனுஷ்டிக்க கூடியவர்களின் பெருமை என்ன?***

பதில்: பகவான் தேவர்களையோ,ரிஷிகளையோ, யோகிகளையோ, சித்தர்களையோ பற்றி குறிப்பிடும்பொழுது, 'என்னுடைய' என்ற அடைமொழியுடன் எங்கும் குறிப்பிடுவதில்லை. ஆனால் பக்தர்களை பற்றி குறிப்பிடும்பொழுது மட்டும், "***என் பக்தன், என் பக்தன் (மம பக்தா:)***" என்று குறிப்பிடுவதானாலேயே பக்தன் மீது பகவானுக்கு இருக்கும் ப்ரேமை தெரிய வருகின்றது.



**கேள்வி:** ***மனித பிறவி எடுத்தவர்களுக்கு மிகவும் கிடைத்தற்கரியது எது?***

பதில்: தெய்வம் என்று சொல்லலாம். ஆனால் சிவனோ, விஷ்ணுவோ, தேவியோ எவ்வளவு மஹாக்ஷேத்திரங்களில் கோவில் கொண்டுள்ளனர். காஞ்சிபுரம், மதுரை, தஞ்சாவூர், கும்பகோணம், திருச்சி போன்ற க்ஷேத்திரங்களில் எண்ணற்ற கோவில்கள் உள்ளன. அந்த கோவில்களில் உள்ள தெய்வம் எல்லாம் உண்மைதானே? ஏன் என்றால் அப்படிப்பட்ட மூர்த்தியின் கண்களில் இருந்து









இரத்தம் வந்தபோதுதானே, கண்ணப்பர் தன் கண்களை பிடுங்கி வைத்தார். வடிவுடையம்மன்தானே வள்ளலாருக்கு உணவு பரிமாறினாள்? திரிபுரசுந்தரி அல்லவோ ஞானசம்பந்தருக்கு பால் கொடுத்தாள்? சாரங்கபாணி அல்லவோ திருமழிசையாழ்வாருக்காக எழுந்து கொண்டான்? பெரும்புலியூர் மூர்த்தி அல்லவோ திருமழிசை ஆழ்வாருக்காக திரும்பினார்? உடுப்பி கிருஷ்ணன் அல்லவா கனகதாசருக்காக திரும்பினான்? அண்ணாமலையானும், ஆராவமுதனும் இன்று வரை தமது பக்தர்களுக்காக சிராத்தம் செய்கின்றார்களே! ஆகவே தெய்வம் ஊருக்கு ஊர் கிராமத்திற்கு கிராமம் கோவில் கொண்டுள்ளது. அப்பேர்ப்பட்ட தெய்வத்தை கூட அங்கு சென்று பார்த்து விடலாம். ஆனால், அப்பேர்ப்பட்ட தெய்வத்தை வசப்படுத்திய மஹான்களை, கிடைத்தற்கரிய இந்த மனித பிறவியில் பார்ப்பதுதான், மிகவும் அரிதானது. .







**கேள்வி:** ***மந்திரங்களை ஜபம் செய்வதால் ஏற்படும் பலன் எது?***

பதில்: நம்முடைய சரீரத்தில் (72000) எழுபத்தியிரண்டாயிரம் நாடிகள் உள்ளன. மந்திரங்களை ஜெபம் செய்வதால் அந்த நாடிகளில் சலனம் ஏற்படுகின்றது. அப்படி சலனம் மீண்டும் மீண்டும் ஏற்பட்டு, அது முடிவில் ஹ்ருதயத்தில் சென்று ஒடுங்குகின்றது. அதனால் , அந்த மந்திரங்களுக்கு தக்க பலனை அவன் அனுபவிக்கின்றான்..

# பாகவத பழம்

15

– ஸ்ரீஸ்வாமிஜி

"தத் பாலாக்ஷரமாலாம் ச வாசயாமாஸ யோகவான்" - என்று சூதர் கூறுகிறார். ஆத்மதேவனுடைய தலையில் ப்ரும்மா எழுதியிருந்த எழுத்துக்களை படித்தார். அவர், "இதற்கு முன் ஏழு பிறவிகளிலும் உனக்கு குழந்தைகள் இல்லை; இந்தப் பிறவியிலும் கிடையாது. வரப்போகின்ற ஏழு பிறவிகளிலும் கிடையாது" என்றார். அவ்வளவுதான்! அவன் அப்படியே தலையில் இடி விழுந்தது போல் அமர்ந்து விட்டான். முதலில் இந்த மஹாத்மாவை தரிசனம் செய்தது தனது பாக்கியம் என்று நினைத்தான். இப்பொழுதோ, ஏன்தான் இவரை பார்த்தோமோ? என்று நினக்கலானான். குழந்தை பிறக்கும், பிறக்கும் என்ற நம்பிக்கையிலாவது வாழ்க்கையை கழித்து இருக்கலாம். அதுவும் இல்லாமல் போய்விட்டதே என்ற பயம். மேலும் இவர் ஒரு தபஸ்வி. இவருடைய வாக்கிலிருந்து "பிறக்காது" என்று வந்து விட்டதால், இனி நாம் செய்யும் எந்த பரிகாரமும் பலிக்காமல் போய்விடும் என்ற கவலை வேறு. தலையில் கையை வைத்து கொண்டு கீழே உட்கார்ந்தவன் , விழுந்து புரண்டு அழ ஆரம்பித்து விட்டான். என்ன செய்வது என்று தெரியாமல் பிரமை பிடித்தது போல் இருந்தான். அந்தத் துறவிக்கு அவன் மீது கருணை பிறந்தது.

அவர்-- ரேமுஞ்சாத்ய குடும்பாஙாம்

ஸந்யாஸே ஸர்வதா ஸுகம் (மா 4-36) என்று கூறினார்.

"கவலைப்படாதே! என்னைப் போல் துறவியாகி விடு! சன்யாசத்தைப் போல் சுகத்தை கொடுக்க கூடியது எதுவும் இல்லை தெரியுமா?" என்றார். "ஒரு ஜீவன், கணவனுக்கு மனைவி என்றும், மனைவிக்கு கணவன் என்றும், குழந்தைகளுக்கு பெற்றவர்கள் என்றும், பெற்றவர்களுக்கு குழந்தை என்றும், நண்பர்களுக்கு நண்பன் என்றும், ஆசிரியருக்கு மாணவன் என்றும், முதலாளிக்கு வேலைக்காரன் என்றும், நாட்டிற்கு பிரஜை என்பது போன்ற பலவித உறவுகளில் சிக்குண்டு தவிக்கின்றான். ஆனால், நீ



துறவியாகி விட்டால் ஒரே ஒரு உறவுதான். அது என்ன? குருவிற்கு சீடன் என்பதே! எவ்வளவுக்கெவ்வளவு உறவுகள் குறைகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு ஆனந்தம் அல்லவா? அதுவும் குருவிற்கும் சீடனுக்கும் இருக்கும் உறவு அதிகாரத்தால் ஏற்படுவது அல்ல. அன்பினால் ஏற்படுவது. அதில் என்ன துக்கம் இருக்க போகின்றது? ஆனந்தம் ஒன்றுதான் உள்ளது" என்றார்.

ஆனால் இது எல்லாம் ஆத்ம தேவனுடைய காதுகளில் விழவே இல்லை. இல்லறத்தில் இருப்பவன், பொருள் ஈட்டாமல் இருப்பதும், துறவி பொருள் ஈட்டுவதும் மிகப் பெரிய பாவமாகும். பிரும்மச்சாரி, கிரஹஸ்தன், வானப்ரஸ்தன் இவர்கள் செய்யக்கூடிய தவறுகளுக்கு பிராயச்சித்தங்கள் உண்டு. ஆனால் துறவி செய்யும் தவறுகளுக்கு பிராயச்சித்தங்களே கிடையாது. துறவறம் மேற்கொண்டு தவறு செய்யும் துறவியை, மறு உலகத்தில் இந்திரன் ஓநாய்களை விட்டு கடிக்கச் செய்வான். இவை அனைத்தும் ஆத்ம தேவனுக்கு தெரியும். ஏன் என்றால், அவன் எல்லா தர்ம சாஸ்திரங்களும் கற்றுணர்ந்தவன் அல்லவா?

இல்லறத்தில் இருப்பவன், பொருள் ஈட்டாமல் இருப்பதும், துறவி பொருள் ஈட்டுவதும் மிகப் பெரிய பாவமாகும். பிரும்மச்சாரி, கிரஹஸ்தன், வானப்ரஸ்தன் இவர்கள் செய்யக்கூடிய தவறுகளுக்கு பிராயச்சித்தங்கள் உண்டு. ஆனால் துறவி செய்யும் தவறுகளுக்கு பிராயச்சித்தங்களே கிடையாது. துறவறம் மேற்கொண்டு தவறு செய்யும் துறவியை, மறு உலகத்தில் இந்திரன் ஓநாய்களை விட்டு கடிக்க செய்வான்.

ஆகவே, "ஸ்வாமி! பரிபக்குவம் அடையாத துறவறம் ஒரு மனிதனை நரகத்தில் தள்ளுவது போல் வேறு ஒன்றும் கிடையாது அல்லவா?" என்றான். அவன் சொன்னதில் இருக்கும் தர்மத்தை உணர்ந்த அவர், அங்கு காட்டில் கிடந்த ஒரு

பழத்தைத் எடுத்தார். மந்திரங்களை உச்சரித்து, அதன் மூலமாக தன்னுடைய தவத்தை அதில் செலுத்தினார். "இதை கொண்டு உன் மனைவியிடம் கொடு! புத்திரன் பிறப்பான்!" என்றார். முதலில் ஏழேழு பிறவிக்கும் குழந்தை பிறக்காது என்றாரே! பின் இது எப்படி? என்று கேட்கலாம். அது விதி; இது அருள். இதிலிருந்தே அருளானது விதிக்குள் அகப்படாது என்று தெரிய வருகின்றதன்றோ!

> நம் அறிவிற்குப் புலப்படாத சில விஷயங்கள் இருக்கின்றது என்பதற்காக நம் நாட்டின் மூதாதையர்களின் ஆழ்ந்த அறிவாற்றலைப் பறைசாற்றும் இதிகாச புராணங்களை இகழ்வது என்ன நியாயம்?

விதியையும் மீறி அருள் செய்யக்கூடியவர்கள் மஹான்கள் என்று தெரிய வருகின்றது. மஹான்கள் நவகிரஹங்களை கால்பந்து விளையாடுவது போல் விளையாடுவார்கள். தான் விரும்பியபடி அதை மாற்றி அமைத்து கொள்வார்கள். முடியும் என்பது முற்றிலும் உண்மை. ஆனால், அப்படி அவர்கள் செய்வதற்கு உன்னுடைய சிரத்தையும், பக்தியும் பொறுமையும், அன்பும், பணிவும் அவர்களை தூண்ட வேண்டும்.

ஒரு மஹாத்மா, ஒருவருக்குக் குழந்தை இல்லை என்று பழம் கொடுத்தார். குழந்தை பிறந்தது. அதை அறிந்த குழந்தை இல்லாத வேறு ஒரு தம்பதிகள் அம்மஹாத்மாவிடம் சென்றனர். அவர்களுக்குக் குழந்தை பிறக்கவில்லை. காரணம் என்ன? அந்த மஹாத்மாவிற்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் போன்ற பாகுபாடுகள் இருக்குமோ? அது உண்மை அல்ல. பின் என்ன? ஒருவருக்குக் குழந்தை பிறக்கவில்லை என்றால் என்ன காரணம்? சென்ற பிறவிகளில் செய்த ஏதோ ஒரு பாவம் தடுக்கின்றது என்பதே காரணம். அருள் செய்யக்கூடிய மஹாத்மாவின் தவத்தின் பலம் அவர்கள் செய்துள்ள கர்மாவைவிட அதிகமாக இருந்தால், பலன் கிடைத்துவிடும். பாவம் அதிகமாகவும், தவத்தின் வலிமை



குறைவாகவும் இருந்தால், அது பலன் தருவதில்லை. இதுவே உண்மை! ஏதோ ஒரு கஷ்டத்திற்குப் பரிகாரம் செய்துவிட்டுப் பலன் ஏற்படவில்லை என்றால், பரிகாரங்கள் போதாது என்பதே உண்மையாகும்.


எல்லாப் புண்ணியத்திற்கும் ஒரேவிதமான சுகம் கிடையாது. அதுபோல், எல்லாப் பாவத்திற்கும் ஒரே விதமான துன்பம் கிடையாது. இன்ன இன்ன புண்ணியம் செய்தால் இன்ன இன்ன சுகம் கிடைக்கும் என்பதையும், இன்ன இன்ன பாவம் செய்தால் இன்ன இன்ன துக்கம் வரும் என்பதையும் மஹரிஷிகள், சாஸ்திரங்கள் மூலமாகச் சொல்லியுள்ளனர். அவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். விலங்குகள், பறவைகள், பூச்சிகள் போன்றவைகளுக்குத் தாங்கள், ஏன் இப்படிப் பிறந்துள்ளோம் என்றோ, பாவம், புண்ணியம், தர்மம், அதர்மம், முக்தி என்றோ எதுவும் தெரியாது. நம் தேசத்தைத் தவிர வேறு எந்தத் தேசத்தில் உள்ளவர்களுக்கும் இதற்கெல்லாம் காரணம் தெரியாது. ஏன் என்றால், அவர்கள் தேசத்தில் யாரும் இதையெல்லாம் சொல்லவில்லை. நம் தேசத்தின் பெரிய நிதி அல்லவா இத்தகைய சாஸ்திரங்கள். இவற்றையெல்லாம் ஒருவன் அறிந்து கொள்ளவில்லை என்றால், அவனும் விலங்கிற்குச் சமமானவனே!

உதாரணத்திற்கு, மஹாபாரதத்தை எடுத்துக் கொள்வோம். ஒரு லட்சம் ஸ்லோகங்கள், அவ்வளவுதான் நம் கையில் கிடைத்துள்ளதாம். கிடைத்ததே இவ்வளவு என்றால், மொத்தம் எவ்வளவு இருந்திருக்கும்? அமெரிக்க நாட்டினுடைய முதல் பிரஸிடென்ட் யார் என்றால் எல்லாரும் ஜார்ஜ்வாஷிங்டன் என்று சொல்லுவார்கள். அதற்கு முன் சுமார் நான்கு தலைவர்களின் பெயர்களை அவர்கள் சொல்ல விரும்பவில்லை. ஏன் என்றால் அந்தத் தலைவர்களுக்கு கிராமம், நகரம் இவற்றை அமைக்கத் தெரியவில்லை, பொருளாதாரம், Civil Laws, Criminal Laws, Ruling System, Security போன்ற எதுவுமே தெரியாதவர்கள். ஆகவே, அவர்களுடைய பெயரைச் சொல்லிக்கொள்ள அமெரிக்கா வெட்கப்படுகின்றது. ஆனால், மஹாபாரதத்தினுடைய காலம் என்ன? அதைப் படித்துப்

பாருங்கள்! மேனி சிலிர்க்கும். இன்ன இன்ன விஷயங்கள்தான் அதில் பேசப்பட்டிருக்கின்றன என்று கணக்குப் போட்டுக் காட்ட முடியுமா என்ன? படிக்கப் படிக்க வியப்பு மேலிட்டு, திக்குமுக்காடிப் போவீர்கள்!

நம் அறிவிற்குப் புலப்படாத சில விஷயங்கள் இருக்கின்றது என்பதற்காக நம் நாட்டின் மூதாதையர்களின் ஆழ்ந்த அறிவாற்றலைப் பறைசாற்றும் இதிகாச புராணங்களை இகழ்வது என்ன நியாயம்? சரி! விஷயத்திற்கு வருவோம். ஆத்மதேவன் கண்களில் நீரைத் துடைத்துக்கொண்டு, பழத்தைப் பெற்றுக் கொண்டான். அவரை விழுந்து நமஸ்கரித்தான்.

(கனியும்)







## Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Gururam Consulting Private Limited

சனாதனப் புதிர் : பகுதி – 7 விடைகள்

–ஆத்ரேயன்



1)கிருஷ்ணா; த்ருபத ராஜனுடைய பெண் ஆனதால் திரௌபதி; பாஞ்சால தேசத்து ராஜகுமாரி ஆனதால் பாஞ்சாலி. பார்ஷதி; யாகத்தில் இருந்து வந்ததால் யாஞசேனி; கருமை நிறமாக இருப்பதால் ச்யாமா.

2)வனபர்வா - அத்தியாயங்கள் 205-217 - மார்கண்டேய ரிஷி யுதிஷ்டிரருக்குச் சொல்லுகிறார்.

3)சிவன்.

4)துர்யோதனனின் விஸ்வாசமான ஊழியன். பாண்டவர்களை குந்தி தேவி உட்பட, கொல்வதற்காக அரக்கு மாளிகையை நிர்மாணித்து அதற்கு தீ வைத்தபோது, அதில் இறந்து போனான்.

5)வைஷ்ணவாஸ்த்ரம் - இதை ஸ்ரீ க்ருஷ்ணர் தனது மார்பில் வாங்கிக் கொள்ள அது வைஜயந்தி ஹாரமாக (மாலையாக) அவர் கழுத்தில் விழுந்தது.

6) i) வஸுவிற்கும் அத்ரிகாவிற்கும் பிறந்த பெண். செம்படவனால் வளர்க்கப் பட்டாள். பராசரரின் மனைவி. வியாசரின் தாய். சந்தனுவின் மனைவி, சித்ராங்கதன், விசித்ர வீர்யன் இவர்களின் தாய்.

ii)காதியின் புதல்வி, ரெய்கரின் மனைவி, ஜமதக்னியின் தாய்

iii)நாரதரின் மனைவி

7)வைஷ்ணவ யாகம் (வன பர்வா - அத்தியாயங்கள் 255-256)

8)மகத தேசத்து அரசன் ஜராசந்தன், சேதி தேசத்து அரசன் சிசுபாலன், வேடுவனான ஏகலவ்யன் (துரோண பர்வா - 180 - 32.5, 121 - 17.21)

9)தேவேந்திரனுக்காக விஸ்வகர்மாவால் செய்யப்பட்டது. அரக்கர்களை அழிப்பதற்காக உண்டாக்கப்பட்டது. இந்திரன் பரசுராமரிடம் கொடுக்க, பரசுராமர் கர்ணனுக்குக் கொடுத்தார். இது அர்ஜுனனுடைய காண்டீபத்தை காட்டிலும் உயர்ந்தது. (கர்ணபர்வா - 31)

10)சோமன் எனப்படும் சந்திரனின் பிள்ளை. புதனுடைய பிள்ளையின் பெயர் புரூரவஸ். மனைவியின் பெயர் இளா.



## சிந்திப்பதில் நாமனைவரும் ஹிந்துக்கள்தான்

அமெரிக்காவை சேர்ந்த Newsweek எனும் பத்திரிக்கை தனது இணையதளத்தில் ஒரு சுவையான தகவலை வெளியிட்டு இருக்கிறது. லிஸா மில்லர் என்பவர் "We are all Hindus" என்ற தலைப்பில் இக்கட்டுரையை எழுதி இருக்கிறார். அதன் சுருக்கம் பின்வருமாறு இருக்கிறது:

"அமெரிக்கா ஒரு கிறிஸ்துவ நாடல்ல. கிறிஸ்துவர்களால் துவங்கப்பட்ட நாடு. (ஒரு மில்லியன் இந்துக்கள் அமெரிக்காவில் உள்ளனர். உலகின் ஒரு பில்லியன் மக்களை பார்க்கும்பொழுது இது ஒன்றுமில்லை). இன்று அமெரிக்கர்களில் 76சதவிகிதத்தினர் கிறிஸ்துவர்கள்தான். சிந்தனையில் கிறிஸ்துவர்கள் இந்துவை போல் மாறி வருகின்றனர். இந்த மாற்றம் குறிப்பாக கடவுள், மறு பிறப்பு, ஆன்மா போன்றவை குறித்து காணப்படுகிறது.

இந்துக்களின் புனிதமான ரிக் வேதம் "உண்மை ஒன்றே ; அதை ரிஷிகள் பலவாறு பல பெயர்களில் எடுத்துரைக்கின்றனர்" என கூறுகிறது. இந்துக்கள் கடவுளை அடைய பலவழிகள் உண்டு என ஒப்புக்கொள்கின்றனர். எந்த ஒரு வழியையும் தாழ்வாக கருதுவதில்லை. அமெரிக்கர்கள், எந்த ஒருவழியும் கடவுளை நோக்கி இட்டு செல்லுமானால், அதை பின்பற்றுவது சரியே என இந்துக்களை போன்ற ஒரு பரந்த நோக்கத்துடன் எண்ண துவங்கியுள்ளனர். அதற்காக இந்து மத கோட்பாடுகள், புத்த கோட்பாடுகள், யோகா என போக தயங்குவதில்லை. இது இந்துக்களின் சிந்தனையை ஒத்து இருக்கிறது.

உடலும் உயிரும் இணைந்த ஒன்று; பிரிக்க முடியாதது என கிறிஸ்துவம் போதிக்கிறது. மறுபிறப்பையும் அது ஒத்து கொள்ளுவதில்லை. இந்து மதமோ உடலை ஜடம் என்கிறது. அதனால் இந்துக்கள் அதை எரித்து விடுகின்றனர். ஆன்மா அழிவற்றது என்றும் அது மறுபடி மறுபடி கர்ம வாசனைகளுக்கு தகுந்தபடி பிறப்பு எடுக்கிறது என்றும் போதிக்கிறது. தற்பொழுது அமெரிக்கர்கள் பலர் உடலை எரித்து விடுகின்றனர். இதற்கு காரணம் மறுபிறப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்து இருப்பதுதான். இதுவும் இந்துக்களின் சிந்தனையை ஒத்து இருக்கிறது.

எல்லோரும் சேர்ந்து "ஓம்" என்று சொல்லுவோம் என அந்த கட்டுரை முடிகிறது. இவ்வாறு லிஸா மில்லர் இந்த சுவையான தகவலடங்கிய கட்டுரையை எழுதியுள்ளார். இந்த கட்டுரையை http://www.newsweek.com/id/212155 இணைய தளத்தில் பார்க்கலாம்.

*சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஆகஸ்டு 27** - மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்ற ராதாஷ்டமியில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டார்.

**ஆகஸ்டு 29** - ஆந்திர மாநிலம் ஒங்கோலில் நடைபெற்று வரும் நமது வேதபாடசாலைக்கு ஸ்ரீஸ்வாமிஜி விஜயம் செய்தார். அங்கு அத்யாபகராக இருக்கும் ஸ்ரீராகவசர்மா மற்றும் வித்யார்த்திகளுக்கு ஆசிகள் வழங்கி விட்டு சென்னை திரும்பினார்.

**செப்டம்பர் 1** - மாமண்டூர் அருகில் உள்ள தூசி மாமண்டூர் – சிவன் கோவில் கும்பாபிஷேக விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டு அருளுரையாற்றினார். பல பக்தர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

**செப்டம்பர் 4** - கோவிந்தபுரம் சைதன்யகுடீர் ஆண்டுவிழா (விவரங்கள் - பக்கம் 4 பார்க்க)

**செப்டம்பர் 6** - சென்னை மேற்குமாம்பலம் சுப்ரபாத சபாவின் 40வது ஆண்டு விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி கலந்துகொண்டார்.

**செப்டம்பர் 9 முதல் 13வரை** - சேங்கனூர் - ஸ்ரீஸ்ரீஅண்ணா அவதாரம் செய்து இந்த வருடத்துடன் 75வருடங்கள் பூர்த்தியாகின்றன. கும்பகோணத்தை அடுத்துள்ள சேங்கனூர் என்ற க்ஷேத்திரமே ஸ்ரீஸ்ரீ அண்ணா அவர்கள் அவதாரம் செய்த ஊர். இது திருவெள்ளியங்குடி என்ற திவ்ய தேசத்திலிருந்து 2கி.மீ. தூரத்தில் உள்ளது. தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்த திருமண்டங்குடியும் சமீபத்தில் உள்ளது. சேங்கனூரில்தான் பரம சிவபக்தரும், சிவபக்தர்களுள் ராஜாவுமான சண்டிகேஸ்வரரும் அவதாரம் செய்தார். சங்கபுரி என்பது இந்த க்ஷேத்திரத்தின் புராதன பெயர். ஆவணி ரோஹிணியில்தான் இந்த க்ஷேத்திரத்தில் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையும் அவதரித்தார். அவருடன் திருப்பதியிலிருந்து வந்த ஸ்ரீனிவாச பெருமாளும், அவரால் ஆவணி ரோஹிணியில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். அதே வம்சாவழியில் அதே ஆவணி ரோஹிணியில் ஸ்ரீஸ்ரீ அண்ணா ஸ்ரீஜெயந்தி அன்று அவதாரம் செய்தார். அவருடைய 75வது அவதார உத்ஸவம் நம்முடைய பக்தர்களால் சேங்கனூரில் விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஸ்ரீனிவாச பெருமாளுக்கு பவித்ரோத்ஸவமும் செய்யப்பட்டது. நம்முடைய ஸ்ரீசாந்தீபனி குருகுல வித்யார்த்திகளின் வேத பாராயணம் நடைபெற்றது. ஸ்ரீஸ்ரீபாதுகைகளும் புஷ்ப பல்லக்கில்



புறப்பாடு செய்யப்பட்டது. பல ஊர்களில் இருந்தும் பக்தர்கள் வந்திருந்து இந்த உத்ஸவத்தில் கலந்து கொண்டு குரு க்ருபைக்கு பாத்திரமானார்கள்.

**செப்டம்பர் 19 முதல் 27 வரை** - மதுரபுரி ஆஸ்ரமத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவில் முழுமையாக ஸ்ரீஸ்வாமிஜி கலந்து கொண்டார். நவராத்திரியை ஒட்டி தினமும் ராமாயண பாராயணம் நடைபெற்றது. தினமும் மாலை 4மணிக்கு ஸ்ரீஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார். திரளான அன்பர்கள் வந்திருந்தனர்.

இதே நாட்களில், மதுரபுரி ஆஸ்ரமம் அருகில் மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்று வரும் கிராமங்களான கலத்துபட்டு, கூழங்கல்சேரி, வைப்பூர் ஆகிய கிராமங்களுக்கு 20,21 தேதிகளில் சென்று அங்கு இருக்கும் பக்தர்களுக்கு ஆசி வழங்கி ஊக்குவித்து வந்தார்.



செப்டம்பர் 21ம் தேதி அருகிலுள்ள வெள்ளரை கிராமத்திற்கு சென்று சிறுவர் பள்ளியில் படிக்கும் மாணாக்கர்களுக்கு சீருடை வழங்கி வந்தார். நமது அறக்கட்டளைகள் மதுரபுரி ஆஸ்ரமம் சுற்றி உள்ள பல பள்ளிகளுக்கு தேவையான உதவிகளை பன்முறை செய்து வந்திருக்கிறது. வெள்ளரை கிராமத்து சிறார்களுக்கு சீருடை வழங்கப்படுவது இது மூன்றாவது வருடம்.

22ம் தேதி ஸ்ரீஸ்வாமிஜி ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்று வரும் கிருபா சேவை மையத்திற்கு சென்று வந்தார். இச்சேவை மையம் Autism/Down's Syndrome ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளையும் சேவைகளையும் செய்து அரவணைத்து வருகிறது. அங்குள்ளோரின் சேவை மனப்பான்மையை கண்டு ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் நெகிழ்ந்து போனார். அங்கு இருந்தோருக்கு பழங்கள் வழங்கப்பட்டது.

# பாலகர்களுக்கு ஒரு கதை

## கிளிகள் சொன்ன ரகசியம்





மகாராஷ்டிர தேசத்தில் உள்ள ஒரு அழகிய நகரம் நாசிக். இந்த ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். இவர், தான் உழைத்து ஈட்டிய செல்வத்தை கொண்டு மிக வசதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். உடை அணிவதில் இருந்து சகல விதமான செயல்களையும் ஒரு ரசிப்புடன் செய்வார். இவருடைய வீட்டில் பல மாடிகள் உண்டு. ஒவ்வொன்றிலும் மிகவும் கலை நேர்த்தியுடன் செய்யப்பட தூண்கள் மற்றும் சிற்பங்கள் உண்டு. இவை அனைத்தும் மிக அரிய வகையை சேர்ந்தவை. செல்ல பிராணிகளை வளர்க்கும் வழக்கம் கொண்டவர். அதிலும் உயர் ரகம்தான் இருக்கும். இப்படி பல வீட்டு பிராணிகள் உண்டு. அப்படி, தான் வளர்க்கும் பிராணிகளுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து விடுவார். உதாரணமாக தான் வளர்க்கும் நாய்க்கு விசேஷமான ஒரு உணவு இருந்தால், அது நிச்சயம் அங்கு உள்ள நாய்க்கு கிடைக்கும். இவருடைய வீட்டில் பல வேலைக்காரர்கள் உண்டு. அவர்கள் வீட்டையும் பிராணிகளையும் பொறுப்புடன் கவனித்து கொள்வர்.

இந்த நபருக்கு குடும்பத்துடன் சுற்றுலா செல்லும் பழக்கம் உண்டு. குழந்தைகளுடன் வருடம் ஒருமுறை இந்தியாவிலுள்ள அழகான பிரதேசங்களில் எதோ ஒன்றிற்கு தனது காரிலேயே சென்று விடுவார். பத்து நாட்கள் வரை தங்கி உல்லாசமாய் காலம் கழித்து விட்டு திரும்பி விடுவார். இந்தியாவின் வட தேசங்களில் பெரும்பாலும் சென்று வந்த இவருக்கு ஒருமுறை தென்னிந்தியாவிற்கு வர வேண்டும் என்ற ஆசை வந்தது. அதிலும்



மதுரை மாநகர் வந்து தங்கி மீனாக்ஷி கோவில், கொடைக்கானல் எல்லாம் சென்று வர வேண்டும் என ஆசை. அப்படியே வந்தார். சுற்றுலா முடிந்து, அவர் மறுபடி நாசிக் செல்ல வேண்டிய நாளும் வந்தது. அன்று, ஒரு பூங்கா வழியாக நடந்து வந்து கொண்டிருந்தவர் ஓரிடத்தில் அப்படியே திகைப்புடன் நின்று விட்டார். ஏன் தெரியுமா? ஒரு வியாபாரி கிளிகளை விற்று கொண்டிருந்தான். அதிலும் மிக அழகான வண்ண மயமான கிளிகள். ஒன்றொன்றின் கொஞ்சலும் அவருடைய குழந்தையையும் அவரையும் மிகவும் கவர்ந்து விட்டது. அவளுடைய பெண் ஜனா பத்து வயதானவள். "எனக்கு கிளி வாங்கி தாருங்கள் அப்பா" என செல்லமாய் கொஞ்சினாள். ஏற்கெனவே அதில் மனதை பறி கொடுத்திருந்தவருக்கு மகள் கேட்டவுடன் கிளி வாங்கும் எண்ணம் வந்தது. வியாபாரியின் அருகே சென்று வினவினார்.


சிறிது நேரம் அவனிடம் பேசிக்கொண்டிருந்த பொழுது, இந்த செல்வந்தர் பேசிய சிறு வார்த்தைகளை அவர் பேசியபடியே ஒரு கிளி பேசிற்று. ஆச்சரியத்துடன் அதை பற்றி வினவினார். "இது பேசும் கிளி வகையை சேர்ந்தது. அருகிலுள்ள ஒரு காட்டிலிருந்து நான் மிகவும் சிரமப்பட்டு பிடித்து வந்தேன். வேறு எங்கு சென்றாலும் கிடைக்காது" என்றான் வியாபாரி. கூடவே "அதை உங்களுக்கு தர முடியாது. அது பார்வைக்கு மட்டும்தான்" என்றான். ஏன் என்று வினவ "நீங்கள் கேட்கும் தொகைக்கு அது வராது " என்றான். கிளி வேண்டுமென்று ஜனாவோ பிடிவாதம் பிடித்தாள், அதனால், வியாபாரி கேட்ட



மிக பெரிய தொகையை கொடுத்து தனிகர் வாங்கினார். அப்புறம் என்ன? அடுத்த நாளே கிளியும் நாசிக் வந்தது.

கிளி நாசிக் வந்தவுடன் அதற்கு பாதுகாப்பான இடம் தரப்பட்டது. அதில் திருப்தி அடையாத தனிகர் ஒரு வாரத்திற்குள்ளாகவே அதற்கு ஒரு அற்புதமான தங்க கூண்டை வாங்கி வந்தார். ஜனா தினமும் கிளியுடன் ஆசையுடன் பேசி வந்தாள். "கிளி என்ன சொல்கிறது" என்று ஒருநாள் தனிகர் கேட்க "அது ஏனோ சோகமாக இருக்கிறது" என வருத்தமுடன் கூறினாள் ஜனா.

"உனக்கு என்ன கஷ்டம் இங்கே" என கிளியிடம் சென்று அவரே கேட்க, கிளி "என்னை தங்க கூண்டில் அடைத்தாலென்ன? உயர்ந்த தானியங்களை அளித்தாலென்ன? உன் அழகு மகள் என்னிடம் பேசினாலென்ன? இந்த குளிர்மையான வீட்டில் இருந்தென்ன? இது எல்லாம் எனக்கு சந்தோஷம் தரவில்லை" என்றது. மேற்கொண்டு அது "என்னை சுதந்திரமாக பறக்க விட்டு விடு. அதுதான் எனக்கு மகிழ்ச்சி. நான் என் கூட்டத்தார் வசிக்கும் வனத்திற்கு சென்று விடுவேன்" என்றது. செல்வந்தர் அதை கேட்கவில்லை. ஒரு வருடம் கழிந்தது.



மறுபடி ஜனாவிற்கு விடுமுறை வந்தது. மதுரை மிகவும் பிடித்து விட்டதால், அவளும் அவள் தந்தையும் அங்கேயே செல்ல விரும்பினர். கிளம்பும் முன் அவர் கிளியிடம் வந்து "கிளியே நான் மீண்டும் மதுரை மாநகர் செல்கிறேன். உன் கூட்டத்தார் எங்கு இருப்பர் என நீ சொல்வாயானால் அவர்களிடம் சென்று நீ சௌகரியமாக இருப்பதை தெரிவிப்பேன்"



என்றார். உற்சாகமடைந்த கிளி முழு விவரங்களை கொடுத்தது.

இரண்டு நாட்களில் கிளி குறிப்பிட்ட வனப்பகுதிக்கு வந்த தனிகர், அந்த பேசும் கிளியின் கூட்டத்தை கண்டுபிடித்தார். அவற்றிடம் சென்று தான் வளர்க்கும் கிளியை பற்றிய விவரங்களை கூறினார். அவற்றை முழு கவனத்துடன் கேட்டன கிளிகள்.

"கிளிகளே, தங்க கூண்டில் என் வீட்டிலிருக்கும் கிளிக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி உண்டா?" என வினவினார் தனிகர். இதை கேட்டதுதான் தாமதம்; கிளிகள் அனைத்தும் மரணமடைந்தது போல் தம் தம் கிளைகளில் அமர்ந்தவாறே பொத்தென தலையை சாய்த்தவாறே வீழ்ந்தன. வீழ்ந்தவை எழவே இல்லை. அனைத்தும் இறந்ததைக் கண்டு மிகவும் வருத்தத்துடன் திரும்பினார் தனிகர்.

நாசிக் திரும்பி வந்து, தங்க கூண்டில் இருக்கும் கிளியிடம் சென்று உனது உறவினர்களை பார்த்தேன் என்றார். படுத்திருந்த கிளி சட்டென எழுந்தது. கண்கள் பிரகாசமாகி "என் உறவினர்கள் என்ன சொன்னார்கள்?" என ஆவலுடன் வினவியது. "நான் உனக்கான செய்தி என்ன? என வினவியவுடன் அனைத்து கிளிகளும் மரித்து விட்டன" என்றார். ஒரு கணம்தான் இருக்கும். அதை கேட்ட அந்த கிளியும் மரணமடைந்தது போல் கூண்டிலேயே சலனமற்று விழுந்தது. செல்வந்தருக்கு மிகவும் துக்கம். அடடா! அரிய வகை கிளி மரித்து விட்டதே என வருந்தினார். கூண்டின் கதவை நிதானமாக திறந்தார்.

அவ்வளவுதான்! மரித்தாற்போல் இருந்த கிளி சட்டென சிறகடித்து திறந்திருந்த கூண்டின் வாசல் வழியே பறந்து போய்விட்டது. அப்பொழுதுதான் தனிகருக்கு கிளிகள் வனத்தில் மௌனமாக எவ்வளவு சாமர்த்தியமாக நடித்து காட்டி உள்ளன என்பது புரிந்தது. கிளியின் தந்திரம் கண்டு வியந்து போனார் தனிகர். "அது சுதந்திரமாக பறக்க ஆசைப்பட்டது அப்பா. அந்த சுதந்திரம் அதற்கு கிடைத்து விட்டது அப்பா!" என்றாள் ஜனா.

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

(சென்ற இதழ் தொடர்ச்சி)



கோடைக்காலத்தில் பனமாலிராய் பஹதூர், ராதாவிநோதனுக்கு 24மணிநேரமும் விசிறி சேவை செய்ய ஆட்களை நியமித்தார். ஒரு பக்தர், ராதாவிநோத்ஜீ இந்த சேவையினால் மிகவும் பிரசன்னமாக உள்ளான் என்பதை உணர்ந்து, கோயில் மூடும் முன்பே உள்ளே சென்று விடுவார். பின் அந்த வேலையாட்களை அவ்வப்போது இளைப்பாற சொல்லி விட்டு, தானே ஸ்ரீவிக்ரஹங்களுக்கு விசுறுவார். ஒரு நள்ளிரவு, இவ்வாறு விசிறிக்கொண்டிருந்தபொழுது, அவர் சற்று கண் அயர்ந்து விட்டார். அப்பொழுது அவர் ஒரு கனவு கண்டார்.

ஸ்வப்னத்தில் ராதாவினோத்ஜீ அவரை எழுப்பி "நீ தூங்குகின்றாயே! எனக்கு மிகவும் வியர்க்கின்றது. என்னை குண்டத்திற்கு அழைத்து செல்" என்று கூறினான். அதனால் அவர் வினோதாவை தனது தோளில் வைத்து குண்டத்திற்கு அழைத்து செல்லலானார். ஆனால் அந்த பக்தருக்கோ தோளில் ஒரு கட்டி இருந்தது. வினோத்ஜீ அவரிடம் "இது என்ன உனது தோள்களில் என்னால் சரியாக உட்கார முடியவில்லையே" என்று கூறியபடியே தனது கைகளால் அவரது தோளின் மேல் தடவினான். அதன் பிறகு, அந்த பக்தர் வினோத்ஜீயை குண்டத்தினருகில் அமர்த்தி விட்டு, தான் பக்கத்தில் படுத்து உறங்கி விட்டார். இந்த தருணத்தில் அவரது கனவு கலைந்து விட்டது. விழிப்பு வந்தவுடன் அவர் தன்னை குண்டத்தின் அருகே கண்டதும் திகைத்து விட்டார்.

> வ்ரஜத்தில் சில சித்தர்கள் அல்லது தெய்வபுருஷர்கள் சாதகர்களுக்கு இவ்வாறு உதவுவார்கள் என்று பாபா அறிந்திருந்தார். அதனால் அவர் வந்திருந்தது ஒரு கோபிதான் என்று எண்ணி அந்த போர்வையை தன் தலை மேல் வைத்து பூஜித்தார்.



கோயிலுக்கு சென்றாலோ அங்கு எல்லா கதவுகளும் பூட்டியிருந்தது இவருக்கு மேலும் வியப்பளித்தது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தோள்களில் ஒரு இதமான உணர்வை உணர்ந்தார். கையை தோள் மேல் தடவிய போது அங்கு அவருக்கிருந்த கட்டி மறைந்து விட்டிருந்ததை கண்டு விக்கித்து நின்றார்.

இச்சம்பவத்தை பாபா , கௌராவிடம் கூறி , சேவையை எவ்வளவு



"பாவ"த்துடன் செய்ய வேண்டும் என்பதை விளக்கினார்.

ராதாகுண்டத்தில் பாபா புரஸ்சரணம் செய்தார். பிறகு சந்திரசரோவருக்கு சென்றார். இங்கு மீண்டும் புரஸ்சரணம் செய்தார். இங்கு அவர் ஒவ்வொரு நாளும் காலை மூன்று மணியிலிருந்து கோவர்த்தன பரிக்ரமா செய்வார். ஒருநாள் அவர் இவ்வாறு பரிக்ரமா செய்யும்பொழுது மிக பலமாக மழை பெய்ய தொடங்கியது. அப்பொழுது பாபா ஒரு மரத்தடியில் ஒதுங்கினார். அப்பொழுது அங்கு பக்கத்திலிருந்த ஒரு பாம்பு அவரை பார்த்து

சீறிற்று. ப்ருந்தாவனத்தில் எந்த ஜீவனும் மற்றொரு ஜீவனை ஹிம்ஸிக்காது என்று எண்ணி பாபா அதை பொருட்படுத்தாமல், அங்கேயே உட்கார்ந்து ஜபம் செய்யலானார். தூரத்திலிருந்து யாரோ அவர் மேல் ஒரு போர்வையை வீசி எறிந்து "பாபா! பாம்பை பார்த்து பயமில்லையா? ஓடி விடுங்கள்! அது உங்களை கடித்து விடப்போகின்றது" என்று ஒரு பெண்குரலில் கூறினார்கள். வ்ரஜத்தில் சில சித்தர்கள் அல்லது தெய்வபுருஷர்கள் சாதகர்களுக்கு இவ்வாறு உதவுவார்கள் என்று பாபா அறிந்திருந்தார். அதனால் அவர் வந்திருந்தது ஒரு கோபிதான் என்று எண்ணி அந்த போர்வையை தன் தலை மேல் வைத்து பூஜித்தார். பின் அதையே போர்த்தி கொண்டு மழையிலேயே பரிக்ரமாவை தொடர்ந்தார். ........ தொடரும்

## சனாதனப் புதிர் - பகுதி - 8

–ஆத்ரேயன்

(பகுதி 8-ன் விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

1)த்விஜன், விப்ரன், ஸ்ரோத்ரியன், பிராஹ்மணன் என்ற பல பெயர்களின் அர்த்தம் என்ன?
2) யோக வாசிஷ்டம் இது யாரால் இயற்றப்பட்டது? இதனுடைய மற்றொரு பெயர் என்ன? மொத்தம் எத்தனை ஸ்லோகங்கள்?
3) யோக வாசிஷ்டத்தில் யார் யாருக்கு விளக்கம் அளிக்கிறார்?
4) ஸௌரமானம், சாந்த்ரமானம் என்றால் என்ன?
5) பாரத தேசத்தின் பாரம்பரியத்தை ஒட்டிய குருவை கௌரவிக்கும் நாள் (ஆசிரியர் தினம்) எது?
6) உபநயனம், மௌஞ்சி பந்தனம், பிரம்மோபதேசம் என்றால் என்ன?
7) லகு யோகவாசிஷ்டம் யாரால் கொடுக்கப்பட்டது? எத்தனை ஸ்லோகங்கள்?
8)ஸௌரமான முறையில் மேஷ ராசியில் ஸூர்யன் ப்ரவேசிப்பதை எப்படிச் சொல்லுகிறார்கள்?
9) நான்கு முகங்கள் இல்லாத பிரஹ்மா, நான்கு கைகள் இல்லாத விஷ்ணு, நெற்றிக்கண் இல்லாத சிவன் இவர் யார்?
10)யோக வாசிஷ்டத்தில் யாரைப்பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன?



## மாலே மணிவண்ணா – 77

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

நம்மாழ்வார் திருவாய்மொழியில்,"கோணை பெரிதுடைத்து எம்பெம்மானை கூறுதலே' என்றார். ஒன்றுக்கொன்று மாறுபடும் தன்மைகள் உடையவன் அவன்.

முதலாவது அவன் பரம்பொருள். அதாவது பரப்பிரும்மம். வேத முடிவாய் விளங்குகிறவன். எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன். எல்லாமாயிருப்பவன். வடிவம், குணம் செயல், பெயர் முதலிய எந்த அடையாளத்திற்கும் அப்பாற்பட்டவன். அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அகப்படாதவன். தான் ஒன்றே தனித்து ஒன்றாக இருப்பவன். உண்மை, அறிவு, இன்பம் என்று அனுபவித்து உணரும் உணர்வு நிலைக்கு உரியவன். தானே தன்னை விளக்கினால் அன்றி பிறரால் விளக்க இயலாதவன்.



இரண்டாவது உலக காரணமாக உள்ள ஈஸ்வரன் - பரப்பிரும்மத்திடம் அடங்கி தனக்கென வேறு தன்மை இல்லாமல், அபின்னமாக இருந்த மாயை பிரும்மத்திடமிருந்து, உலகை தோற்றுவிக்கும் சங்கல்ப வடிவும் விளக்கமும் பெற்று விரிகிறது. அந்த தன்னிடமிருந்து தோன்றிய மாயையின் போர்வையில்

அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் அகப்படாதவன். தான் ஒன்றே தனித்து ஒன்றாக இருப்பவன். உண்மை, அறிவு, இன்பம் என்று அனுபவித்து உணரும் உணர்வு நிலைக்கு உரியவன். தானே தன்னை விளக்கினால் அன்றி பிறரால் விளக்க இயலாதவன்.

அடங்கிய நிலையில், உலகின் தோற்றத்திற்கு காரணமானவர் இவர் . உலகை தோற்றி, இயக்கி, பாதுகாத்து, தேவை அற்றவைகளை அழித்து ஒடுக்குகிற முத்தொழிலும் புரிகிற நிலை இது. பிரும்ம, விஷ்ணு, உருத்திரர் என்ற மும்மூர்த்தி நிலை, ப்ரத்யும்னர், அநிருத்தர், சங்கர்ஷணர் என்ற வ்யூகம், பஞ்ச ப்ரும்ம வடிவாக இவரே சதாசிவர், ஈஸ்வரர், உருத்திரர், விஷ்ணு, ப்ரம்மா என்றாகிறார். பஞ்ச கிருத்தியங்களை செய்கிறார். இவை அனைத்தையும் தன் சங்கல்பத்தால் நடத்துகிற பரவாசுதேவனாக, பரமேஸ்வரனாக, பராசக்தியாக விளங்கும் நிலை.

*இந்திரன்,யமன்,வருணன், அக்னி, வாயு, சூரியன், சந்திரன் முதலிய ஒவ்வொரு துறையில் தனித்து நிர்வாகம் செய்யும் சக்தி பெற்ற தேவதைகள் -- உலகை நிலைநிறுத்த பரம்பொருள் ஏற்கும் வடிவங்கள்.*

*மறையாய நால்வேதத்து உள்நின்ற மலர்ச்சுடரே*
*முறையால் இவ்வுலகெல்லாம் படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்தாய்*
*பிறையேறு சடையானும் நான்முகனும் இந்திரனும்*
*இறையாதல் அறிந்தேத்த வீற்றிருத்தல் இது வியப்பே (திவ்ய 2906)*

என்னும் திருவாய்மொழி இவ்விடத்து ஓதி உணரத்தக்கது.

<u>மூன்றாவது</u> உலகை நிலைநிறுத்தி நடைபெறச்செய்யும் நிலை, இந்திரன்,யமன்,வருணன், அக்னி, வாயு, சூரியன், சந்திரன் முதலிய ஒவ்வொரு துறையில் தனித்து நிர்வாகம் செய்யும் சக்தி பெற்ற தேவதைகளாக வடிவெடுத்து அண்டத்திலும் பிண்டத்திலும் இருந்து இயக்கி உலகை நெறிப்படுத்துகிறது. உலகை நிலைநிறுத்த பரம்பொருள் ஏற்கும் பல வடிவங்கள் இவை.

*'இவையும் அவையும் உவையும் இவரும் அவரும் உவரும்*
*அவையும் யவரும் தன்னுள்ளே ஆகியும் ஆக்கியும் காக்கும்*
*அவையுள் தனி முதல் எம்மான் கண்ணபிரான் என் அமுதம்*
*சுவையன் திருவின் மணாளன் என்னுடை சூடில் உளானே! (திவ்ய -2763)*

என்ற திருவாய்மொழி இந்நிலையை விளக்கும்.



<u>நான்காவது:</u> தோற்றுவித்த பொருள் அனைத்திலும் விரவி நின்று தானே உயிருக்கு உயிராக இருந்து உட்புகுந்து நின்று அது அது தன்னியல்பில் தளராது இயங்க செய்து அவ்வவ்வுயிர்களின் தனித்துவத்தை வெளிப்பட செய்யும் ஆன்ம வடிவமாகவே இருப்பது



<u>ஐந்தாவது:</u> விதி என்கிற வடிவத்தில் நிற்பவர் - அவ்வவ்வுயிர்களின் வினைப்பயன்களை கொண்டு அவ்வவற்றுக்குரிய இன்ப துன்பங்களை மாறாது அனுபவிக்க செய்யும் விதியின் வடிவமாக விளங்குகிறவர்.

தோற்றுவித்த பொருள் அனைத்திலும் விரவி நின்று தானே உயிருக்கு உயிராக இருந்து உட்புகுந்து நின்று அது அது தன்னியல்பில் தளராது இயங்க செய்து அவ்வவ்வுயிர்களின் தனித்துவத்தை வெளிப்பட செய்யும் ஆன்ம வடிவமாகவே இருப்பது

<u>ஆறாவது:</u> கருணாமூர்த்தி. துன்பத்தில் ஆழ்ந்து துடித்து வாடும் உயிர்களுக்கு துணை நிற்கிற அன்பு வடிவம். தாய் , தந்தை, நண்பன், இறைவன் என்று வெவ்வேறு வடிவங்களின் அருகில் நின்று அணைத்து காப்பாற்றுபவர். தன்னை வழிபடுவார்க்கு அவர்கள் இழைத்த தவறுகளை பெரிதுபடுத்தாமல் அருளைத்தரும் கருணைக்கடல்

(தொடரும்)

## *அக்ஷரமணமாலை* (ஸ்ரீஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-162)

பைங்கொடியாய் நான் பற்றின்றி வாடாமல்
பற்றுக்கோடாய்க்கா வருணாசலா

செல்வம், ஆரோக்கியம், பெரிய பதவி ஆகியன உள்ளோருக்கு நிம்மதி கிடைத்து விடும் என்று சொல்வதற்கு இல்லை. உலக வாழ்வில் இருக்கும் ஒரு ஜீவனுக்கு பல விதமான சிரமங்கள் ஏற்படும்.இவற்றிலிருந்து விடுபட பகவானின் அருளும் குருவின் அருளும் தேவை.

சத்சங்கம், பகவானின் கதைகள், மஹான்களின் சங்கம் ஆகியவை மிகவும் நன்மை தரக்கூடியது என சொன்னால் மாயையில் கட்டுண்ட மனம் நம்பாது.

லௌகீகமான வாழ்விற்கே திருவருள் இன்றியமையாதது எனின் சாதகர்களுக்கு சொல்வானேன்! சாதகர்களுக்கு புறவாழ்விலும் அகவாழ்விலும் சிரமங்கள் ஏற்படும். சாதனைக்கு தடையாக உள்ள நகர வாழ்க்கை, சுற்றுப்புறம், குடும்ப உறுப்பினர் என பலவகையிலும் சாதகருக்கு சாதகமின்றி இருக்கலாம். இது போக அகத்தில் சாதகருக்கு ஏற்படும் சிரமங்களோ தனி. நல்ல எண்ணங்கள் ஏற்பட வேண்டிய இடத்திலே மிக துர்சிந்தனைகள் தோன்றும். மேலும் இவை வாசனையினால் மிகவும் தூண்டப்பட்டு மறுபடி மறுபடி தோன்றும். இவற்றை எல்லாம் குருவருளால்தான் விலக்க முடியும்.



சாதகர்கள் மட்டுமின்றி மிக உயர்ந்த பக்குவிகளுக்கே கூட குருவின் சங்கம் இன்றியமையாதது. நாமதேவர் மிகப்பெரிய ஹரிபக்தர். சாக்ஷாத் பாண்டுரங்கனையே தனது மிக சிறிய வயதில் பேச வைத்தவர். தினமும் பாண்டுரங்கனிடம் பேசக்கூடியவர். அப்பேர்ப்பட்ட பாண்டுரங்கனே நாமதேவரை , ஒருமுறை ஒரு மஹாத்மாவிடம் அனுப்புகிறான். அந்த குருவின் மூலமாக நாமதேவர் கோவிலில் இருக்கும் விட்டலன் எங்கும் நிறைந்திருக்கும் பரப்பிரும்ம மூர்த்தியே என்பதை தெள்ளத்தெளிவாக அனுபவத்தில் அறிந்து கொள்கிறார்.



சாதகர் முதற்கொண்டு பக்குவிகள் வரை அனைவருக்கும் குருவின் அருள் இன்றியமையாதது. இதையே "பைங்கொடியாய் பற்றின்றி வாடாமல் - படர பற்றில்லாமல் இருக்கும் கொடி மிகவும் கஷ்டப்படும். அப்படி நான் கஷ்டப்படாது இருக்க பற்றுக்கோடாய்- ( படர ஒரு கொழுகொம்பாய், துணையாய், ஆதரவாக) வந்து எனைக் காப்பாற்று அருணாசலா, என்கிறார் ரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

மதுரமுரளி சந்தாதாரர்கள் ஆக விரும்புகிறவர்கள்
Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு
51, 7th Avenue , Ashok Nagar, Chennai - 83 என்ற
முகவரிக்கு ரூ120/ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை/
டி.டி./ மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும்
சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக
குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்கிறோம். PH:+914424895875

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| அக்டோபர் 1 | காரைக்குடி உபன்யாசம் |
| அக்டோபர் 4 | நங்கநல்லூர் பஜனை மேளா |
| அக் 14,29, நவ 13 | ஏகாதசி |
| அக்டோபர் 20 | குடியாத்தம் கோதண்டராமர் கோவில் |
| அக்டோபர் 25 | ஆம்பூர் - உபன்யாசம் |
| நவம்பர் 2-8 | திருச்சி பக்த விஜயம் உபன்யாசம் |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875,
Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.